எடுக்கிறார்கள். என்றாலும், அந்தப் பகுதி மக்களின் ஒத்துழைப்பின் பேரிலேயே அந்த முயற்சிகள் எல்லாம் நடைபெற வேண்டும். அந்த முறையில்தான் அவர்கள் கூடுமான வரையில் தருகிறார்கள். பிற்பட்ட பகுதி என்ற காரணமாக சென்ற ஆண்டு, பெரும் நகரங்களின் புறநகர்ப் பகுதிகளில்—சுற்றுப் புறங்களில்—கல்லூரிகள் ஆரம்பித்தும், அப்படிப்பட்ட கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் 10,000 இடங்கள் காலியாகத்தான் இருக்கின்றன. காரணம், வேறு பல கல்லூரிகளில் மாணவர்கள் சேர விரும்பும் காரணத்தால் இப்படிப்பட்ட பகுதிகளில் ஆரம்பிக்கப் படும் கல்லூரிகளில் இடம் காலியாக இருக்கிறது என்றெல்லாம் சுட்டிக் காட்டப்படுகிறது. இதை யெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு, எந்த எந்த இடத்தில் தேவைப்படுகிறது என்பதை ஆராய வேண்டியிருக்கிறது. பின் தங்கிய தன்மையையும் ஆராய வேண்டியிருக்கிறது. ஏற்படுத்தக்கூடிய வசதி வாய்ப்பையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இவற்றை யெல்லாம் பார்த்துத்தான் முடிவு செய்ய வேண்டும்.

*293 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் அரசாங்க ஆண்கள் கல்லூரி நிறுவ 1974-75-ஆம் கல்வி ஆண்டில் அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, புதிதாகக் கல்லூரிகளை அதிகம் திறப்பதைவிட, இருக்கின்ற கல்லூரிகளில் கல்வியின் தரத்தை உயர்த்துவது குறித்து அரசாங்கத்தில் ஏதாவது பரிசிலனை இருந்து வருகிறதா? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இருக்கிற கல்லூரிகளிலும், பல்வேறு கல்லூரிகளில் கட்டட வசதிகள் மற்ற பல வசதிக ளெல்லாம் செய்யப்பட வேண்டியிருக்கின்றன. ஏற்படுத்தப்பட்ட கல்லூரிகளில் புதிய கட்டடங்கள் மற்றவைகளை உருவாக்க வேண்டிய நிலை இருக்கிறது. பல் கல்லூரிகளில் பி.ஏ., பி.எஸ்ஸி. இன்னும் பல்வேறு துறைகளை

1974 மார்ச் 6]

ஆரம்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதற்கான கட்டட வசதி, வேறு பல வசதிகள் செய்யப்படவும், அரசாங்கக் கல்லூரிகளை வலுவுபடுத்தவும் அவற்றினுடைய கல்வித் தரத்தை வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், கூடுமான அளவுக்கு கல்லூரிக் கல்வியைப் பரவலாக்குவதைவிட, இருக்கிற கல்லூரிகளில் கல்வியின் தரத்தை செம்மைப்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டியிலுள்ள செங்கழுனிவல்லியம்மன் தேவஸ்தான போர்டு மூலமாகப் பெண்கள் கல்லூரி ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை சமர்ப்பித்திருக்கிறது. அது சம்பந்தமாக அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது? மேற்கொண்டும் நிதி தேவை என்றால், அந்த தேவஸ்தானத்தில் போதுமான நிதி வசதி இருப்பதால், அதைக் கொண்டு பெண்கள் கல்லூரி நிறுவுவதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்த விண்ணப்பத்தைப்பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. விண்ணப்பம் பரிசீலனையில் இருக்கக்கூடும். முப்பது விண்ணப்பங்கள் வரையில் வந்திருக்கின்றன என்று குறிப்பிட்டேன். ஆகவே, விண்ணப்பங்கள் பல்கலைக் கழகத்தால் பரிசீலிக்கப்பட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு, பிறகு அரசாங்கம் கல்லூரிக் கல்வி இயக்குநரைக் கலந்துதான் முடிவு செய்ய வேண்டும். ஆகவே, அது பரிசீலனையில் இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. கு. காமாட்சி: நாட்டில் பெண்களுக்குப் போதுமான கல்லூரிகள் இல்லை. ஆகவே ஆண்கள் கல்லூரிகளில் பெண்களைச் சேர்க்கலாம் என்று அரசாங்கத்தினிடம் யோசனை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த யோசனையை துரிதப்படுத்தி, வரும் கல்வி ஆண்டிலாவது அந்த யோசனையை அமுல் நடத்த அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுதே பி.ஏ., பி.எஸ்ஸி. வகுப்புகளில் சேர்க்கலாம், பி.யு.சியில் சேர்க்கக் கூடாது என்ற நிபந்தனையை சென்னைப் பல்கலைக்கழகம் கடைப்

பிடித்து வருகிறது. மதுரைப் பல்கலைக் கழகம் ஓரளவுக்கு இந்த விதியை தளர்த்தியிருக்கிறது. பெண்களைச் சேர்க்கிற கல்லூரிகளில் குறிப்பிட்ட சில வசதிகள் இருக்கவேண்டும். குறைந்தது இரண்டு பெண் ஆசிரியர்களாவது இருக்க வேண்டும். பெண்கள் தங்குவதற்கு ஒரு தனி அறை இருக்கவேண்டும். வேறு பல வசதிகளையும் செய்து தந்தால் அந்த நிபந்தனையைத் தளர்த்தலாம் என்ற அளவுக்கு மதுரை பல்கலைக் கழகம் எடுத்திருக்கிற அதே முடிவை சென்னை பல்கலைக் கழகமும் எடுக்க வேண்டும் என்று இந்த அரசு வற்புறுத்தி வருகிறது.

திரு. த. சோனையா: ஒரு கல்லூரி துவங்குவதற்கு 5 லட்சம் ரூபாய் கட்ட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வசதி படைத்த சில மாவட்டங்கள் 5 லட்சம் ரூபாய் கட்டுவதற்குத் தயாராக இருக்கின்றன. பிற்படுத்தப் பட்ட மாவட்டங்களின் 5 லட்சம் ரூபாய் கட்ட முடியாமல் இருக்கிற காரணத்தினால் அங்கே கல்லூரி வருவதற்கு இயலாமல் ஆகிவிடுகிறது. ஆகவே, மாவட்ட அடிப்படையில் அல்லது ஜனத்தொகையின் அடிப்படையில் இந்தக் கல்லூரிகள் அமைக்கப் பட வேண்டும் என்று அரசு ஏதாவது ஒரு உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுது இருக்கிற நிலைமையில் அப்படிப்பட்ட உத்தரவு பிறப்பிப்பதற்கு இல்லை. அரசின் சார்பாக கல்லூரிகள் இருக்க வேண்டுமென்றால் 5 லட்சம் ரூபாய் நிதி செலுத்த வேண்டும். நாற்பது ஏக்கர் நிலம் காட்டவேண்டும். தற்காலிகமாக கட்டடங்கள் காட்ட வேண்டும். என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 5 லட்சம் ரூபாய் திரட்டித் தந்தாலும் கூட அரசு மேலும் 25 அல்லது 30 லட்சம் ரூபாய் செலவழிக்கக்கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலை ஏற்பட்டாலும் கல்லூரி அமைப்பதற்கு 5, 6 வருடம் ஆகிவிடுகிறது. இப்படிப்பட்ட நிபந்தனைகள் போடுவதில் கூட, இந்தத் தொகையை 10 லட்சம் ரூபாயாக ஆக்கவேண்டும் என்று கூட ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. இப்பொழுது இருக்கிற நிலைமைகளில் அதை அந்த அளவுக்கு ஆக்க வேண்டாம் என்று கருதி, 5 லட்சம் ரூபாயாகவே அரசாங்கம் இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறது.

1974 மார்ச் 6]

திரு. எ. சுவாமிதாஸ்: தனியார்கள் தங்களால் நடத்தப்படும் கல்லூரிகளை அரசு நடத்த வேண்டும் என்று கோரிக்கையை முன்வைத்தால், அந்தக் கல்லூரியை ஏற்று நடத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதனுடைய சூழ்நிலையில் மற்றவைகளை யெல்லாம் பார்த்துத்தான் 'ஆன் மெரிட் பேஸிஸ்' என்ற அளவுக்கு அப்படிப் பட்ட விண்ணப்பங்களை ஆராய்ந்து, அது அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்குத் தகுதி படைத்திருக்கிறதா என்பதனை ஆராய்ந்து தான் செய்யவேண்டும். குறிப்பிட்டுக் கேட்டால் அதுபற்றி தகவல் சேகரித்துத் தரலாம்.

திரு. சி. ஆறுமுகம்: 40 ஏக்கர் நிலம் வேண்டும் என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 5 லட்சம் ரூபாய் வேண்டுமானால் எப்படியாவது வாங்கிக் கொடுத்துவிடலாம். இட நெருக்கடி காரணமாக 40 ஏக்கர் நிலம் வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்தி, ஒவ்வொரு இடத்திலும் இப்படிப்பட்ட சங்கடத்தை நீக்கி, கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 40 ஏக்கர் நிலம் வேண்டும் என்பது பல்கலைக்கழகம் விதித்த நிபந்தனையாகும். இதைத் தளர்த்தினால் பல சங்கடங்கள் ஏற்படும். கல்லூரிக்குக் கட்டடம் கட்ட வேண்டும். பிறகு மாணவர்களுக்கு விடுதிகள் கட்ட வேண்டும். விளையாட்டு அரங்கள் அமைக்க வேண்டும். இன்னும் மற்ற வசதிகளை யெல்லாம் ஏற்படுத்த வேண்டும். இவற்றையெல்லாம் கணக்கில் வைத்து தான் பல்கலைக்கழகம் 40 ஏக்கர் நிலம் வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் உள்ளூர ஜாதி குறிப்பிடப்படுகிறதே. அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது வழி வகைகள் செய்திருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுது இருக்கிற சட்டத்தின் அடிப்படையில் ஜாதி வேறுபாடு கல்வித் துறையில் காட்டப்படக் கூடாது என்பது கவனிக்கப்பட்ட

வேண்டிய ஒன்று. தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் 18 சதவிகிதம் கட்டாயம் ஒதுக்க வேண்டும் என்பதும் பிற்பட்ட மக்களுக்கு 31 சதவிகிதம் கட்டாயம் ஒதுக்க வேண்டும் என்பதும் கட்டாயப்படுத்தப்படுகிறது. மற்றபடி கல்வித் துறையில் ஜாதி வேறுபாடு கூடாது என்பது தான் இப்பொழுது இருந்து வருகிற சட்டமாகும்.

திரு. எம். சுரேந்திரன்: கல்லூரிகள் ஏற்படுத்துவதில் அந்தந்தப் பகுதியில் இருக்கிற தேவைகளை உத்தேசித்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறதா? அல்லது ஆங்காங்கு கல்லூரிகளை அமைப்பதற்குப் பணம் வசூலித்து தரப்பட்டால் அதன் அப்பபடையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா? இம்மாதிரி ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று நடவடிக்கை எடுத்து, சிறிது பணமும் வசூலித்து வைத்திருக்கிற மேட்டூரில் இன்னும் கல்லூரி அமைக்கப்படவில்லையே? அதற்கு உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தேவையை உத்தேசித்துத்தான் அனுமதி வழங்கப்படுகிறது. கூடுமான வரையில் ஒரு இடத்தில் கல்லூரி இல்லாமல் 30, 40 மைல் சுற்று வட்டாரத்தில் கல்லூரி இல்லாத சூழ்நிலையில், அம்மாதிரி இடத்திற்கு முதல் சலுகை தரப்பட்டு, பணம் கட்டுவதற்கும், மற்ற நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு வற்புறுத்தப்பட்டு வருகிறது. சில பல இடங்களில் ஏராளமான கல்லூரிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் கல்லூரி ஆரம்பிப் பதற்கு அனுமதி தருவதில்லை. பெரிய நகரங்களில் ஏற்கனவே அதிகமாக கல்லூரிகள் இருக்கின்றன. சில மாவட்டங்களில் அதிகமாகக் கல்லூரிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் கூட அனுமதி அளிப்பதில்லை. வசதி குறைவாக இருக்கிற இடங்களிலும், மாணவர்களின் தேவையைக் கருதியும், பரவலாக கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் அரசு கல்லூரி அமைப்பது பற்றி யோசித்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய மேட்டூர் கல்லூரியைப் பற்றிய விண்ணப்பம் பரிசிலனையில் இருக்கும் என்று கருதுகிறேன். அதைப் பரிசிலித்ததற்குப் பிறகு அனுமதி தர இயலுமா, இயலாதா என்பதைப் பற்றிக் கூற முடியும்.